[1981 மார்ச் 26

சில நேரங்களில் கூட்டுறவு முறையிலே நடக்கிற தொழிற்சாலைகளுக்குக் குளோரைட் சரியாகக் கிடைக்காமல் போய்விடுகிறது. ஆகவே குளோரைட் தயாரிக்கிற தொழிற்சாலைகளிலிருந்து கூட்டுறவு முறையிலே இயங்குகின்ற தொழிற்சாலைகளுக்கு முதலில் வழங்கிவிட்டு, பின்னர் தனியார் தொழிற்சாலைகளுக்கு வழங்கவேண்டுமென்று இந்த அரசு ஆணையிடுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனை பரிசீலிக்கப்படும்.

சைதாப்பேட்டை சாயத் தொழிற்சாலை.

*வினா எண் 490—**திரு. து. புருஷோத்தமன் :** மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

சென்னை-சைதாப்பேட்டையில் சாயத் தொழிற்சாலை ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : இல்லை.

திரு. து. புருஷோத்தமன் : தலைவர் அவர்களே, சைதாப்பேட்டையில் ஏறக்குறைய 20 ஆயிரம் பேர்கள் கைத்தறித் தொழிலிலே ஈடுபட்டிருக்கிறார்கள். 10 ஆயிரம் பேர்கள் நிரந்தர வேலையில்லாமல் சிரமப்படுகிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிப்பதற்குப் பெருந்தொகை முதலீடு செய்ய வேண்டியதில்லை. அங்கே உள்ளவர்கள் தற்போது அனகாபுத்தூர் போன்ற இடங்களுக்குச் சாயத்தைத் துவைப்பதற்காகச் செல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். ஆகவே சைதையில் சிறிய சாயத் தொழிற்சாலை அமைப்பது குறித்து இப்போது இல்லாவிட்டாலும் பின்னராவது ஏற்படுத்த முயற்சி செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : ஏற்கெனவே சைதாப்பேட்டையிலே நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்தின் சார்பிலே ஒரு சாயத் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சார்பிலே 168 சாயத் தொழிற்சாலைகள் தமிழ்நாட்டிலே ஆங்காங்கே நடந்து வருகின்றன. இதைத் தவிர பெரிய அளவிலே 90 இலட்சம் ரூபாய் செலவிலே 7 சாயத் தொழிற்சாலைகள் தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு அவற்றிலே 4 முழுமைபெற்று பணியைத் துவங்கியிருக்கின்றன. 3 இன்னும் ஓராண்டிற்குள் பணியைத் துவங்க இருக்கின்றன.

1981 மார்ச் 26]

திரு. து. புருஷோத்தமன் : துவங்கப்பட்ட இருக்கின்றவற்றில் சைதாப்பேட்டையிலே ஒன்று துவங்கப்பட வேண்டுமென்பது தான் அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை. இப்போது இருப்பது போதுமானதாக இல்லை. ஆகவே அந்தப் பகுதியிலே உள்ளவர்கள் வெளியே சென்று சாயம் துவைக்கவேண்டிய நிலைமை இருக்கிறது என்பதை அரசு கவனத்தில் கொண்டு சாயத் தொழிற்சாலையை அங்கே அமைக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : சிறிய அளவிலே, கூட்டுறவு நெசவாளர் சங்கங்கள் நடத்துகின்றன. அவை போது மான அளவுக்கு இருக்கின்றன. அவை தவிர 7 இடங்களில் பெரிய அளவிலே 90 இலட்ச ரூபாய் செலவிலே ஏற்படுத்தப் படுகின்றன என்பதை நான் ஏற்கெனவே சொன்னேன். அவற்றில் 4 ஏற்கெனவே முழுமைபெற்று பணியைத் துவங்கிவிட்டன. இன்னும் 3 விரைவில் ஏற்படுத்தப்படும். சைதாப்பேட்டையிலே கூட்டுறவுச் சங்க சாயத் தொழிற்சாலை ஏற்கெனவே இயங்கிக் கொண்டிருக்கிறது.

திரு. எம். ஆறுமுகம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே உள்ள பஞ்சாலைகளிலே ஸ்பின்னிங் மில்ஸ்தான் அதிகமாக இருக்கின்றன. காம்போஸ்ட் யூனிட்டுகள் இல்லை. என்.டி.சி. நிறுவனம் பாண்டிச்சேரியிலே .....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது சைதாப்பேட்டையில் உள்ள சாயத் தொழிற்சாலை பற்றியது.

Setting up of a Jasmine Oil Factory.

*Q. No. 491—Thiru N. KITTAPPA : Will the Hon. the Minsiter for Agriculture be pleased to state:—

(*a*) whether the Agro Industriss Corporation, Tamil Nadu is planning to set up a Jasmine Oil Facto y in this State; and

(*b*) If so, the details there of ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : (அ) மற்றும் (ஆ) தமிழ்நாடு வேளாண் தொழில்கள் கழகம் தமிழ்நாட்டில் மல்லிகைப் பூ எண்ணெய் தொழிற்சாலை அமைக்கும் சாத்தியக் கூறுகளை ஆராய்ந்து வருகிறது. கீழ்க்காணும் சில முக்கிய தேவைகள் நிறைவு செய்யப்பட்டால்தான் மேற்படி தொழிற்சாலை அமைப்பது சாத்தியமாகும் என வேளாண் இயக்குநர் தெரிவித் துள்ளார்.